**<u>அசல் வழக்கு எண். 104/2019</u>**

28.10.2024

**பெயர் – ஜெகதீஸ்வரன் (PW2)**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) இந்த வழக்கின் வா.சா.1 என் உடன் பிறந்த சகோதரர் முத்துக்குமார் என்றால் சரிதான். இந்த வழக்கில் A ஷெட்யூல் சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள சொத்து எந்த சொத்து என்றால் க.ச.எண்.55/2A3 ஆகும். A ஷெட்யூல் சொத்தில் எவ்வளவு விஸ்தீர்ணம் என்றால் 3 ஏக்கர் 80 செண்ட் ஆகும். க.ச.எண். 55/2A2 –ல் 32 செண்ட், க.ச.எண்.55/2A1 –ல் 3 ஏக்கர் சொத்துக்கள் உள்ளது. க.ச.எண்.55/2A1 மற்றும் க.ச.எண்.55/2A3 ஆகிய காகலைகளில் உள்ள சொத்துக்கள் எங்கள் குடும்பத்தார் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் செல்லமுத்து கவுண்டர், ஜெகதீஸ்வரன், முத்துக்குமார் மற்றும் ஈஸ்வரி பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஈஸ்வரி எனது தாயார் என்றால் சரிதான். ஈஸ்வரிக்கு தாவாச் சொத்து எப்படி பாத்தியம் என்றால் எனதுஅம்மாவிற்கு எனது தாத்தா செல்லமுத்து கவுண்டர் 2 ஏக்கர் எழுதி வைத்துள்ளார்.

(2) எனது அப்பாவிக்கு தாவாச் சொத்து எப்படி பாத்தியம் என்றால் எனது அப்பாவிற்கு பாத்தியம் இல்லை. என் தாத்தா செல்லமுத்து கவுண்டர் எனக்கும், என் சகோதரருக்கும் 1999 ம் ஆண்டு 4.80 ஏக்கர் எழுதி வைத்துள்ளார். எனது தாத்தா செல்லமுத்து கவுண்டர் 1999 ம் ஆண்டு எனக்கும், எனது சகோதரருக்கும் எழுதி வைத்த ஆவணத்தில் எவ்வளவு விஸ்தீர்ணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 4 ஏக்கர் 80 செண்ட் மற்றும் 32 செண்ட் அதில் எழுதி வைத்துள்ளார். எனது தாத்தா 1999 ல் எங்களுக்கு சொத்து எழுதி வைத்த போது க.ச.எண். 55/2A2 –ல் தாத்தா பெயரில் சொத்து இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. கந்தசாமி கவுண்டருக்கு ஒரு மகன் உள்ளார். வழக்கு தாக்கல் செய்துள்ள பிரதிவாதி கணேஷ்வரியின் தகப்பனார் பெயர் கோவிந்தசாமி ஆகும். கோவிந்தசாமியின் தகப்பனார் பெயர் பழனிச்சாமி கவுண்டர் ஆகும். க.ச.எண்.55 காலையின் மொத்த விஸ்தீர்ணம் எவ்வளவு என்றால் 15 ஏக்கர் 4 செண்ட்

ஆகும். அதில் எத்தனை சப்டிவிசன் உள்ளது என்றால் 5 சப்டிவிசன் உள்ளது. ஒவ்வொரு சப்டிவிசனிலும் எவ்வளவு விஸ்தீர்ணம் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் எங்களுடையது மட்டும் தான் தெரியும். 55/2A1 –ல் 3 ஏக்கர், 55/2A2 –ல் 7.42 ஏக்கர், 55/2A3–ல் 3.80 ஏக்கர், 55/1A–ல் 17 செண்ட், 55/1B –ல் 66 செண்ட் உள்ளது.

(3) க.ச.எண். 55/1B பி.ஏ.பி வாய்க்கால் 64 செண்ட் ஆகும். க.ச.எண். 55/2A1 காலை 55/2A2 காலைக்கு வடபுறத்தில் உள்ளது என்றால் சரிதான். 55/2A2 காலைக்கு பின்புறம் தான் 55/2A3 காலை உள்ளது என்றால் சரிதான். 55/2A3 காலையை ஒட்டி தென்புறத்தில் தான் வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். 1977 ம் ஆண்டு கந்தசாமி கவுண்டர் செல்லமுத்து கவுண்டருக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தைத் தான் எனது தரப்பில் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1997 ஆண்டிற்கு முன்பு கந்தசாமி கவுண்டருக்கு தாவாச் சொத்து எவ்வாறு பாத்தியம் என்பதை காட்டுவதற்கு ஆவணம் ஏதும் இல்லை என்றால் எனக்கு தெரிய இல்லை. வாய் மொழியாக பூமியை ஓட்டிக்கொண்டிருந்தார்கள். க.ச.55/2A2 காலையில் மொத்த விஸ்தீர்ணம் 7.42 ஏக்கர் என்றால் சரிதான். க.ச. 55/2A2 காலையில் உள்ள பூமி எனக்கு பாத்தியம் உள்ளது என்று எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு எண். ஞாபகம் இல்லை ஆனால் 2012 ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்தேன்.

(4) அசல் வழக்கு 296/2012 வழக்கில் தான் 32 செண்ட் எனக்கு பாத்தியம் என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கை நான் திரும்ப பெற்றதால் தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். என் தாத்தாவே சரிபாதி பாத்தியம் என 2003 ம் ஆண்டு தீர்ப்பு வாங்கியதால் நான் அந்த வழக்கை வாபஸ் பெற்றுவிட்டேன். எனது தாத்தா 2003 ம் ஆண்டு வாங்கிய தீர்ப்பின் அடிப்படையில் தான் அசல் வழக்கு எண்.296/2012 திரும்ப பெற்றுக்கொண்டதாக மேற்படி 296/2012 அசல் வழக்கின் தீர்ப்பு நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கோவிந்தசாமி கவுண்டரும், குப்புச்சாமி கவுண்டரும் சேர்ந்து எங்கள் குடும்பத்தார் மீது தாக்கல் செய்த வழக்கு எண்.542/1999 என்று உடுமலை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு

தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி அசல் வழக்கு எண். 542/1999 வழக்கின் தீர்வில் க.ச.55/2A2–ல் உள்ள 32 செண்ட் இடம் எங்களுக்கு சொந்தமானது என்று தீர்ப்பு சொல்லவில்லை என்றால் சரிபாதி சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 32 செண்ட் என்று குறிப்பிடவில்லை.

(5) நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் நான் 7 வது பத்தியில் க.ச.எண். க.ச.55/2A2–ல் எங்கள் பெயரையும் சேர்த்து பட்டா வழங்கியதால் அசல் வழக்கு எண்.296/2012 வழக்கை நாங்கள் வாபஸ் பெற்றோம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வாய் மொழியாக பாகம் செய்து கொண்டார்கள் என்று நான் குறிப்பிட்ட நிலையில் யார்? முன்னிலையில் பாகம் செய்து கொண்டார்கள் என்று சாட்சிகள் உள்ளார்களா என்றால் தற்போது உயிருடன் இல்லை. வாய் மொழி பாகம் செய்த பிறகு தான் தாவாச் சொத்துக்கள் சப்டிவிசன் செய்யப்பட்டது என்றால் க.ச.எண்.55/2 ஆக இருந்த போது தான் சப்டிவிசன் செய்யப்பட்டது. க.ச.55/1A –ல் உள்ள பொது தடம் எத்தனை ஏக்கர் என்றால் 17 செண்ட் ஆகும். க.ச.எண். 55 ல் மொத்த விஸ்தீர்ணத்தில் 17 செண்ட் போக மீதம் எவ்வளவு உள்ளது என்றால் 14 ஏக்கர் 84 செண்ட் ஆகும். அதில் 2 பங்கு என்பது 7 ஏக்கர் 42 செண்ட் என்றால் சரியல்ல 14 ஏக்கர் 22 செண்டை தான் 2 பங்காக பங்கியுள்ளார்கள்.

(6) க.ச.55/2B வாய்க்கால் எங்களது பங்கில் வருகிறது எனது பங்கு குறைவாக வருகிறது என்று கூறி இந்த வழக்கை தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. க.ச.55/2A2 காலையில் உள்ள 32 செண்ட் சம்மந்தமாக ஏற்கனவே நான் வழக்கு தாக்கல் செய்து வாபஸ் பெற்றதால் தற்போது அதே பிரச்சனைக்கு இந்த வழக்கை நான் மீண்டும் தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. எங்கள் பூமியும் சேர்ந்து கிரையம் செய்துள்ளதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கின் பரிகாரத்தில் B ஷெட்யூல் சொத்து சம்மந்தமாக மட்டுமே பரிகாரம் கோரியுள்ளேன், A ஷெட்யூல் சொத்தான க.ச.55/2A2–ல் உள்ள 32 செண்ட் சம்மந்தமாக எந்த பரிகாரமும் கேட்வில்லை என்றால் சரியல்ல கேட்டுள்ளேன். இதே பிரச்சனை சம்மந்தமாக ஏற்கனவே நீதிமன்றம் விசாரித்து உத்திரவு பிறப்பித்துள்ள

நிலையில் நான் மீண்டும் தற்போது வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.10.28 15:59:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்